# பாடத்திட்டத்தைப் பூர்த்தி செய்வதற்குப் பரிந்துரைக்கப்பட்ட வேலைத்திட்டம்

## தரம் நான்கு (முதலாம் தவணை)

## 2022

### இரண்டாம் தேசிய மொழி – தமிழ்

முன்பிள்ளைப் பருவவிருத்தி மற்றும் ஆரம்பக் கல்வித்துறை
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம

**நாட்டின் இடர் சூழ்நிலை காரணமாக பாடசாலை மாணவர்களுக்குக் கிடைக்கப்பெறாத பாடசாலை நாட்களின் பாடத்திட்டத்தினை நிறைவு செய்து கொள்வதற்குரிய அறிவுறுத்தல் திட்டம்.**

நாட்டின் COVID – 19 தொற்று இடர்காலம் மற்றும் இன்றைய நாட்டின் சமூக பொருளாதார இடர் சூழ்நிலை காரணங்களால் 2021, 2022ம் ஆண்டுக்கான தரம் 01 தொடக்கம் தரம் 05 வரை ஆரம்பப்பிரிவு கல்விப் பிரிவில் கற்கும் மாணவர்களை கருத்திற் கொள்ளும் போது இவர்கள் கல்வி கற்கும் காலத்தை இழந்துள்ளார்கள் என்பது தகவல் பகுப்பாய்வு மதிப்பீடுகள் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு மாணவர்கள் இழந்துள்ள கற்றலுக்குரிய காலவேளைகளின் அடிப்படையினை நோக்காகக் கொண்டு அக் கல்வி ஆண்டுக்கான அத்தியவசியக் கற்றல் தேர்ச்சிகளை அதனடிப்படையில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.

அதனடிப்படையில் ஆரம்பக் கல்விப் பிரிவின் 1 – 5 வரையான தரங்களுக்கு முதலாம் தவணைக்கான கற்பித்தல் உள்ளடக்கங்களின் அத்தியவசியமான பகுதிகள் முன்வைக்கப்ப டுகின்றன. இவ்வத்தியவசியமான பகுதிகள் நிறைவேற்றப்படும் போது இரண்டாம் தவணைக்குரிய கற்றல் சந்தர்ப்பங்களைப் பெற்றுக் கொடுக்க இலகுவாக அமையும் என்பதை மேலும் தெரிவித்துக் கொள்ளலாம்.

எவ்வாறாயினும் நாம் முன்வைக்கும் கருத்து யாதெனில், முதலாம் தவணைக்குரிய மிகவும் அத்தியவசியமான பாடப்பரப்புக்கள் மாணவர்களுக்கு பெற்றுக் கொடுத்திருப்பின் அவற்றை விடுவித்து அவசியமான தேவையான பாடப்பரப்பில் இருந்து ஆரம்பிக்கலாம்.

ஒவ்வொரு பாடப்பரப்புக்கள் சம்பந்தமாக தேவையான கால அட்டவணையில் மாணவர்கள் எண்ணிக்கைக்கு ஏற்ப சுகமான முறையில் மாற்றங்கள் ஏற்படுத்திக்கொள்ள சுதந்திரமுண்டு. மாற்றங்களை ஏற்படுத்த வாய்ப்புத் தரப்பட்டிருப்பினும் பாடப்பரப்புக்களை நிறைவு செய்வதற்குரிய பொறுப்பு ஆசிரியர்களாகிய உங்களையே சாரும்.

ஒவ்வொரு பாடத்திற்குமான பொது ஆசிரியர் வழிகாட்டியின் படி அத்தியவசியமானது எனக் குறிக்கப்பட்ட பாடப்பகுதிகள் மாத்திரம் இங்கு உள்ளடக்கப்பட்டிருக்கின்ற தருவாயில் அத் தவணைக்குரியவைகளை பாடப்பரப்பில் அத்தியவசியமான செயற்பாடுகள் மிகவும் இலகுவான முறையில் தெளிவு படுத்தப்பட்டு பின் வீட்டிலிருந்து கற்றல் செயற்பாட்டில் ஈடுபடுத்த உங்களால் முடியுமாயிருத்தல் வேண்டும்.

தெளிவு படுத்தப்பட்ட செயற்பாடுகளை வீட்டில் இருந்து செய்வித்தலின் போது மாணவர்கள் எந்த விதத்திலும் இடர் நிலைக்குத் தள்ளப்படக்கூடாது என்பதனையும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

எவ்வாறாயினும் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளின்போது சுமூகம், பாதுகாப்பு, மகிழ்ச்சி என்பவற்றுடன் மாணவர்களை ஒன்றிணையுங்கள்.

அதன்படி இலங்கை வாழ் ஆரம்பப் பிரிவில் கற்கும் மாணவச் செல்வங்களின் கற்றல் நடவடிக்கைகளை உறுதியுடன் பலனைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் இவை அனைத்தயையும் நிறைவு செய்ய எம் அனைவருக்கும் இறைவனின் ஆசியும் அருளும் கிடைக்கப் பிரார்த்திப்போம்.

| இரண்டாம் தேசிய மொழி - தரம் 04 | | | | |
|---|---|---|---|---|
| **தேர்ச்சி** | **உள்ளடக்கம்** | **செயற்பாடு** | **பக்க எண்** | **நேரம்** |
| • பாடசாலையில் இருக்கும் வெவ்வேறு ஆட்களை/ நபர்களை இனங்கண்டு கூறுவார். | • ගුරුවරයා/ගුරුවරිය குருவரயா/ குருவரிய - ஆசிரியர்<br>• විදුහල්පතිතුමා விதுஹல்பதி - அதிபர்<br>• ශිෂ්‍යයා ஷிஷ்யயா - மாணவன்<br>• ශිෂ්‍යාව ஷிஷ்யாவ - மாணவி<br>• යහළුවා யஹழுவா - நண்பன்<br>• යෙහෙළිය யெஹெழிய - நண்பி | 1,2 | 311, 312 | 1 மணித்தியாலம் 30 நிமிடங்கள் |
| • குடும்பத்தில் நெருங்கிய உறவினரின் உறவுமுறைகளை இனங்கண்டு கூறுவார். | • ආච්චි ஆச்சி - பாட்டி<br>• සීයා சீயா - தாத்தா/பாட்டன்<br>• මාමා மாமா - மாமா<br>• නැන්දා நெந்தா - மாமி<br>• සහෝදරයා சகோதரயா - சகோதரன்<br>• සහෝදරිය சகோதரிய - சகோதரி | 1,3 | 315, 316 | 1 மணித்தியாலம் 30 நிமிடங்கள் |
| • பொது இடங்களின் பெயர்களை இனங்கண்டு கூறுவார். | • පාසල பாசல - பாடசாலை<br>• පොළ பொல - சந்தை<br>• බස් නැවතුම් පොළ பஸ் நெவதும் பொல - பஸ் நிலையம்<br>• දුම්රිය ස්ථානය தும்ரிய ஸ்தானய - புகையிரத நிலையம்<br>• රෝහල ரோகல - வைத்தியசாலை<br>• බැංකුව பெங்குவ - வங்கி<br>• තැපැල් කාර්යාලය தபல் கார்யாலய - தபால் காரியாலயம் | 1,2 | 317, 318 | 2 மணித்தியாலம் |

| | | | | |
|---|---|---|---|---|
| • அன்றாடத் தேவைகளுக்காக நட்புடன் வேண்டுகோள் விடுப்பார். | • බොන්න (B)பொன்ன - குடியுங்கள்<br>• කන්න (K)கண்ண - சாப்பிடுங்கள்<br>• අරින්න அரின்ன - திறவுங்கள்<br>• සෝදන්න சோதன்ன - கழுவுங்கள் | 1,2 | 319, 320 | 2 மணித்தியாலம் |
| மொத்த நேரம் | | | | 7 மணித்தியாலம் |